மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தைப் (சிப்காட்) பொறுத்தவரை, வர்த்தகம் மற்றும் தொழில் துறைகளின் சார்பாக, தலைவர், தென்னிந்திய வர்த்தக சங்க சபை மற்றும் தலைவர், சென்னை தொழில் வர்த்தக சபை ஆகியோர் இயக்குநர் குழுவில் இடம் பெற்றுள்ளனர். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் (டிக்) பொறுத்தவரை சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் சங்கத்தின் தலைவரும், முன்னாள் தலைவரும் இயக்குநர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்குழுவிலே பல வல்லுநர்கள் இடம் பெறக் கூடுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினாலும், அந்தக் குழுவிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்ப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட், டிக் எல்லாம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக இருக்கிற அமைப்புகள். இந்த அமைப்புகளிலே தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனை வழங்குபவர்களை அங்கே இயக்குநர்களாகப் போட்டிருக்கிறோம். அதிகாரப் பற்றற்றவர்களையும் போட்டிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குகின்ற வாய்ப்பு அவர்களுக்கு சட்டமன்ற அவைக் களத்தில் இருப்பதால், இதுபோன்ற குழுக்களிலே அவர்களை இயக்குநர்களாக நியமித்து, அந்தக் குறுகிய வட்டத்தில் அவர்களை அடைக்க இந்த அரசு விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்னார்கள். நல்ல பதில்தான். இருந்தபோதிலும் ஒரு சின்ன சஜஷன் கொடுக்கலாமென்று நினைக்கிறேன். சிப்காட் மற்றும் டிக் நிறுவனங்களில் தொழில் வல்லுனர்கள் என்று கருதப்படுகிற எக்ஸ்பர்ட் இன்ஜினியர்ஸ் மற்றும் வர்த்தக ரீதியில் எம்.பி.ஏ. படித்தவர்களை, அனுபவ ரீதியாக அவர்களைச் சேர்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்று நான் சிப்காட், டிக் நிறுவனங்களுக்குச் செல்லும்போதெல்லாம்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

கூட்டங்களில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அப்படி இருந்தால் நல்ல அறிவுரை பெறலாமென்ற காரணத்தால்தான் இந்த எண்ணத்தை நான் தெரிவிக்கிறேன். இந்த யோசனையை ஏற்று அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் இடம் பெற்றவர்கள்—அதிகாரிகள் தவிர மற்றவர்கள், தென் இந்திய தொழில் வர்த்தக சபை மற்றும் சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் சங்கத் தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் சிறந்த ஆலோசனைகளை இந்த அரசுக்குச் சொல்லுகிறார்கள். இந்தக் குழுவில் இருந்துதான் ஆலோசனை சொல்ல வேண்டுமென்று இல்லை. வெளியிலே இருந்துகூட ஆலோசனைகளை எழுத்து மூலமாகச் சொன்னாலும் அல்லது அமைச்சரிடத்தில் சொன்னாலும், அல்லது தொழிற்துறைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளிடம் சொன்னாலும், எப்படிப்பட்ட இடத்திலிருந்து ஆலோசனைகளைத் தந்தாலும் இந்த அரசு நல்ல ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 373, டாக்டர் க. கோபால், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. து. மூர்த்தி கேட்கிறார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

373-

நன்னிலம் பனங்குடியில் சுத்திகரிப்பு ஆலையில் உபதொழில்கள் தொடங்குதல்.

***24166-**டாக்டர் க. கோபால் :*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நன்னிலம், பனங்குடியில் இயங்கவுள்ள சென்னை சுத்திகரிப்பு ஆலையின் மூலம் கிடைக்கும் கச்சாப் பொருட்களைக் கொண்டு உப தொழில்கள் தொடங்க அரசிடம் ஏதும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

TRUTH ALONE TRIUMPHS

(ஆ) பனங்குடியில், எம்.ஆர்.எல். நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வரும் கச்சா பெட்ரோலியம் வடிப்பாலையில் கிடைக்க உள்ள நாஃப்தாவைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 1500 டன்கள் மொத்த உற்பத்தித் திறனுடன் நைட்ரோ பாஸ்பேட் மற்றும் கால்ஷியம் அம்மோனியம் நைட்ரேட் (உரங்கள்) உற்பத்தி செய்யும் வளாகம் ஒன்றினை கடலூருக்கு அருகில் அமைத்திடவும் இத்திட்டத்தை இணைத் துறையில் (Associate Sector) செயல்படுத்தவும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தீர்மானித்துள்ளது. பனங்குடி எம்.ஆர்.எல். ஆலையில் கிடைக்கவுள்ள எரி எண்ணெய்யையும் மேற்கண்ட உர உற்பத்தித் திட்டம் பயன்படுத்திக் கொள்ளும்.

முற்பகல் 10-30

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே கிடைக்கின்ற கச்சாப் பொருட்களை வைத்து, 20 உப தொழில்கள் கடலூரில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். எங்கள் நாகை மாவட்டத்தில் இருக்கிற அத்தனை தொகுதிகளும் மிகவும் பின்தங்கிய தொகுதிகள். அப்படி, அந்தக் கச்சாப்பொருட்களைக் கொண்டு 20 உபதொழில்களை, நன்னிலம் பகுதியில் தொடங்கினால் அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை எளிய மக்கள் பயன்பெறுகிற நிலை ஏற்படும். மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் அந்தப் பகுதியில் கொஞ்சம் குறைவதற்கு வசதியாகவும் இருக்கும். அதனால் படித்த இளைஞர்கள் பயன்பெறுகிற நிலையும் ஏற்படும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடலூரில் அப்படி ஆரம்பிக்க இருக்கிற அந்த நிறுவனங்கள் குறித்துப் பரிசீலனை செய்து எங்கள் பகுதியான நன்னிலம் அல்லது நாகை பகுதியில் ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் பரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 உரத் தொழிற்சாலைகள் அமைக்கவேண்டும் என்று சொன்னால் அதற்குப் பக்கத்தில் துறைமுக வசதி இருக்கவேண்டும். அதற்கு கடலூர்தான் சிறந்த இடம் என்று ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு, அந்த வேலைகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுவிட்ட காரணத்தால், உறுப்பினர் சொல்கிற அந்த இடத்தில் துவங்க பரிசீலிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். கோடிமாரி.